மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 9–4–1981 அன்று காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2–13 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

249. தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு கடன் நிவாரண விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 27–6–1980 ஆம் தேதியிடப் பெற்ற 1578 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டத்தின் (குடியரசுத் தலைவரின் சட்டம் 31/1976) 14 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

250. தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் 1979–80 ஆம் ஆண்டிற்கான எட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-அ-பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

109. கோரிக்கை எண் 18—மருத்துவம் பற்றிய மானியக் கோரிக்கை மீதான மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் உரை 1981–82 (தமிழ், ஆங்கிலம்).

110. இந்திய முறை மருத்துவம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1981–82 (தமிழ், ஆங்கிலம்).

111. கோரிக்கை எண் 18—தொழுநோய்ப் பிச்சைக்காரர் மறு வாழ்த் திட்டம் குறித்த கொள்கைவிளக்கக் குறிப்பு, 1981–82 (தமிழ், ஆங்கிலம்).

112. கோரிக்கை எண் 19—பொதுச் சுகாதாரம் பற்றிய மானியக் கோரிக்கை மீதான மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் உரை, 1981–82 (தமிழ், ஆங்கிலம்).

113. கோரிக்கை எண் 19-க்கான துணைக் குறிப்பு—கழிவு நீர் போக்கு மற்றும் குடிநீர் வழங்கல், 1981–82 (தமிழ், ஆங்கிலம்).

114. 1981–82 ஆம் ஆண்டில் மருத்துவப் பணி, மற்றும் குடும்ப நலம் பற்றிய செயல் வினை முறைத் திட்டம். (ஆங்கிலம்).

115. 1981–82 ஆம் ஆண்டில் மருத்துவக் கல்வி பற்றிய செயல் வினை முறைத் திட்டம். (ஆங்கிலம்).

116. 1981–82 ஆம் ஆண்டில் இந்திய முறை மருத்துவம் பற்றிய செயல் வினை முறைத் திட்டம் (ஆங்கிலம்).

117. 1981–82 ஆம் ஆண்டில் பொதுச் சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து, ஆரம்ப சுகாதார நிலையங்கள் பற்றிய செயல் வினை முறைத் திட்டம் (ஆங்கிலம்).

118. 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டமுன்வடிவின் நகல் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/1981).

119. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மாவட்டக் காவல் சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்டமுன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 33/1981).

120. பொதுப்பணி மற்றும் போக்குவரத்துத் துறைகள் குறித்த தமிழ்நாடு அரசின் 1963–64 முதல் 1965–66 வரை மற்றும் 1969–70 முதல் 1971–72 வரையிலான ஆண்டுக் கணக்குகளின் மீதான குழுவின் முந்தைய அறிக்கைகளில் கண்டுள்ள பரிந்துரைகளின் பேரில் அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் எட்டாவது அறிக்கை.